**கவனிக்க.**- *13.01.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1742 - 2012 ජනවාරි මස 20 වැනි සිකුරාදා - 2012.01.20

*1742 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 60 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 61 |


**கவனிக்க.**- (i) *இலங்கை முதலீட்டுச் சபை (திருத்தம்) சட்டமூலம் 2011, ஒற்றோபர் 21 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(ii) *இலங்கை தொழில்வாண்மையிலான சமூகப் பணியாளர்களின் ஒன்றியம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2011, நவெம்பர் 04 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(iii) *வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு (திருத்தம்) சட்டமூலம் 2011, நவெம்பர் 18 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2012, சனவரி மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, சனவரி மாதம் 13 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

தமிழ் மொழி மூலம் விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவி முல்லைத்தீவு மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளியாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் காரியாலயம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2012, மாசி மாதம் 21 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்ல,
2012, தை 03.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| முல்லைத்தீவு | புதுக்குடியிருப்பு | புதுக்குடியிருப்பு பிரிவில் விவாகப் (பொது), பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், முல்லைத்தீவு |

1-474

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## அல் ஆலிம் சான்றிதழ் பரீட்சைகள்

(அ) 1976 ஆம் ஆண்டு சனவரி மாதம் தொடங்கி அமுலாகும் வகையில், 1973 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி பரீட்சை ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டிருந்த அல் ஆலிம் பரீட்சைகளுக்கான பிரமாணங்களும் பாடத்திட்டங்களும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளனவென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

(ஆ) திருத்தியமைக்கப்பட்டுள்ள பரீட்சை ஒழுங்குவிதிகளும் பாடத்திட்டங்களும் அல் ஆலிம் முதவஸ்ஸிதா சான்றிதழ்ப் பரீட்சை தொடர்பில் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதத்திலிருந்தும், அல் ஆலிம் ஸானவிய்யா சான்றிதழ்ப் பரீட்சை தொடர்பில் 2015 ஆம் ஆண்டு சனவரி மாதத்திலிருந்தும் அமுலாக்கப்படும்.

(இ) ஆயினும், நடைமுறையிலுள்ள பாடத்திட்டங்களுக்கேற்ப ஏற்கனவே பயின்று கொண்டிருப்போரது நலன் கருதி, திருத்தியமைக்கப்பட்டுள்ள பாடத்திட்டங்களின் கீழான பரீட்சைகளுடன், நடைமுறையிலுள்ள பாடத்திட்டங்களின்கீழ் இரண்டு தடவைகள் பரீட்சைகள் நடாத்தப்படும்.

(ஈ) இவ்வேற்பாட்டின்படி, அல் ஆலிம் ஆரம்பப் பரீட்சையானது, 2013 ஆம் 2014 ஆம் ஆண்டுகளிலும் அல் ஆலிம் இறுதிப் பரீட்சை 2013 ஆம், 2014 ஆம், 2015 ஆம், 2016 ஆம் ஆண்டுகளிலும் நடாத்தப்படும். அதன் பின்னர் திருத்தியமைக்கப்பட்ட பாடத்திட்டங்களுக்கேற்ப மாத்திரமே அல் ஆலிம் பரீட்சைகள் நடாத்தப்படும்.

(II) அல் ஆலிம் சான்றிதழ் பரீட்சைத் திட்டம் 2013 ஆம் ஆண்டும் அதன் பின்னரும் மேற்படி பரீட்சை இரண்டு மட்டங்களிலும் நடைபெறும் :-

(1) அல் ஆலிம் முதவஸ்ஸிதா சான்றிதழ் பரீட்சை
(2) அல் ஆலிம் ஸானவிய்யா சான்றிதழ் பரீட்சை

மேற்படி இரண்டு பரீட்சைகளுக்குமான ஒழுங்குவிதிகளும் பொதுப்பிரமாணங்களும் :

1. மேற்படி பரீட்சைகள் கல்வி அமைச்சின் செயலாளருக்காக அவரது மதியுரைப்படி பரீட்சை ஆணையாளர் நாயகம் அவர்களால் வருடாந்தம் நடாத்தப்படும். முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரின் விதந்துரைகள் தேவைக்கேற்ப பெற்றுக்கொள்ளப்படும்.

2. அல் ஆலிம் முதவஸ்ஸிதா சான்றிதழ் பரீட்சை 2013 ஆம் ஆண்டு தொடக்கமும் அல் ஆலிம் ஸானவிய்யா சான்றிதழ் பரீட்சை 2015 ஆம் ஆண்டு தொடக்கமும் நடைபெறும்.

3. ஊடகமொழி.- இப்பரீட்சை அறபு மொழியிலேயே நடாத்தப்படும். மொழிபெயர்ப்பு தவிர்ந்த சகல வினாக்களுக்கும் அறபு மொழியிலேயே விடையளித்தல் வேண்டும். மொழிபெயர்த்தல் வினாவுக்கு விடையளிப்பதற்கு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில் ஒன்றை மட்டும் பரீட்சார்த்தி தெரிவுசெய்யக்கூடியதாக அமைந்திருக்கும்.

**4. தகைமைகள் :**

4.1 முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட அறபுக் கல்லூரி ஒன்றில் மூன்றாண்டுக் கற்கையைப் பூர்த்திசெய்தவர், அல் ஆலிம் முதவஸ்ஸிதா பரீட்சைக்கும், ஐந்தாண்டு கற்கையைப் பூர்த்திசெய்தவர் அல் ஆலிம் ஸானவிய்யா பரீட்சைக்கும், தோற்றுவதற்குத் தகுதியுடையவராவார்.

அல்லது

4.2 மேற்குறித்த அறபுக் கல்லூரியொன்றில் கல்வி பயிலும் ஒரு மாணவர் தகுதியுடையவர் என அதிபர் கருதுமிடத்து மேற்குறித்த இரு பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்குத் தகுதியுடையவராவார். இவ்விரு சாராரும் அறபுக் கல்லூரிப் பரீட்சார்த்திகளாக தோற்ற முடியும்.

4.3 அறபுக் கல்லூரிகளில் கல்வி பயின்று கொண்டிராதோர் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக அண்மையிலுள்ள அறபுக் கல்லூரியொன்றின் ஊடாக பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

4.4 அல் ஆலிம் முதவஸ்ஸிதா பரீட்சையில் சித்தியடையும் பரீட்சார்த்தி அல் ஆலிம் ஸானவிய்யா பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியுடையவராவர்.

4.5 அல் ஆலிம் முதவஸ்ஸிதா பரீட்சையைப் பூர்த்திசெய்த பின்னரே ஸானவிய்யா பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்க முடியும்.

5. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தில் இப்பரீட்சைகளுக்காக பதிவுசெய்யப்பட்ட அரபுக் கல்லூரிகளுக்கு விண்ணப்பப்பத்திரங்களும் அறிவுறுத்தல்களும் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். விண்ணப்பப்பத்திரங்களும் அறிவுறுத்தல்களும் கிடைக்கப்பெறாத அரபுக் கல்லூரிகள் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு வெளிநாட்டு பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்ல" என்ற முகவரியுடன் தொடர்புகொள்ள வேண்டும்.

5.1 விண்ணப்பங்கள் யாவும் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு இரு பிரதிகளை பரீட்சைத் திணைக்களத்துக்கு அனுப்புவதோடு மற்றைய பிரதியை விண்ணப்பம் அனுப்பும் அரபுக் கல்லூரியில் கோவைப்படுத்தி வைத்தல் வேண்டும்.

5.2 விண்ணப்பங்கள் தெளிவாகவும் பிழையின்றியும் பூரணப் படுத்தப்படல் வேண்டும். அவ்வாறு பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பங்களும், காலம் கடந்து கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

5.3 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி வர்த்தமானி அறிவித்தல் மூலம் அல்லது பத்திரிகை விளம்பரம் மூலம் விண்ணப்பம் கோரப்படும் சந்தர்ப்பத்தில் அறிவிக்கப்படும்.

5.4 பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத்தபால் மூலம் பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு, வெளிநாட்டு பரீட்சைகள் கிளை,
தேசிய மதிப்பீட்டுக்கும் பரீட்சித்தலுக்குமான சேவை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்த, பத்தரமுல்ல.

6. **பரீட்சைக் கட்டணம் :**

6.1 முதன் முறையாகத் தோற்றும் அறபுக் கல்லூரிப் பரீட்சார்த்திகளிடம் பரீட்சைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது. இரண்டாம் முறையாக அல்லது அதன் பின்னர் தோற்றுவோரும், தனிப்பட்ட விண்ணப்பதாரிகளும் பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் வேண்டும்.

6.2 கட்டணம் செலுத்தும் முறை.- உரிய தொகையை அஞ்சல் அலுவலகத்தில் செலுத்தி பெறப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

* பரீட்சைக் கட்டணமும் அது செலுத்தப்பட வேண்டிய முறையும் காலத்துக்குக்காலம் தேவைக்கேற்ப பரீட்சைத் திணைக்களத்தினால் அறிவிக்கப்படும்.

7. பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் விண்ணப்பம் செய்த அறபுக் கல்லூரி அதிபர் மூலமாக விநியோகிக்கப்படும்.

7.1 ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்குத் தோற்றும் முதலாவது சந்தர்ப்பத்திலேயே அனுமதி அட்டையைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். தவறும் பட்சத்தில் தனது பரீட்சார்த்தி தகைமையை இழக்க நேரிடும்.

7.2 அனுமதி அட்டையில் விண்ணப்பதாரியின் கையொப்பம் உரிய அறபுக் கல்லூரி அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

8. **ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தல்.**- ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த பின்வரும் ஆவணங்களுள் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் :

(அ) தேசிய அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியாகும் பிரயாணக் கடவுச்சீட்டு.

9. பரீட்சை நிலையங்கள் நிறுவப்படும் நகரங்கள் :

| | | |
|---|---|---|
| (i) | கிழக்கு மாகாணம் | - திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை, அக்கரைப்பற்று |
| (ii) | மேல் மாகாணம் | - கொழும்பு, கம்பஹா, களுத்துறை |
| (iii) | தென் மாகாணம் | - காலி, மாத்தறை |
| (iv) | வடமேல் மாகாணம் | - புத்தளம், குருநாகல் |
| (v) | மத்திய மாகாணம் | - கண்டி, மாத்தளை, நுவரெலியா |
| (vi) | வடமத்திய மாகாணம் | - அநுராதபுரம், பொலன்னறுவை |
| (vii) | ஊவா மாகாணம் | - பதுளை, மொனராகலை |
| (viii) | சப்ரகமுவ மாகாணம் | - மாவனல்ல, இரத்தினபுரி, கேகாலை |
| (ix) | வடமாகாணம் | - வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் |

* மேல் குறிப்பிட்டுள்ள நகரங்களில் நிறுவப்படும் பரீட்சை நிலையங்களுக்கு போதிய விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காதவிடத்து அவ்விண்ணப்பதாரிகள் அண்மையிலுள்ள நகரப் பரீட்சை நிலையத்துடன் இணைத்துக்கொள்ளப்படுவர். தேவையைப் பொறுத்து இந்நகரங்களில் பரீட்சை நிலையங்களை நிறுவாமலிருக்கவும், வேறு நகரங்களில் பரீட்சை நிலயங்களை நிறுவுவதற்கும் பரீட்சை ஆணையாளர் நாயகம் நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

10. **விடைத்தாள் மீள் பரிசீலனை.**- பெறுபேறுகள் வெளியாகி முப்பது நாட்களுக்குள் பரீட்சைத் திணைக்களத்தால் வெளியிடப்படும் படிவங்கள் மூலம் நிறுவனத்தின் அதிபர் விண்ணப்பம் செய்தால் விடைத்தாள்களை மீள்பரிசீலனை செய்வதற்கான வாய்ப்பு அரபுக் கல்லூரி, தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்படும். இதற்காக கட்டணம் ஒன்று அறவிடப்படும். பரீட்சை முடிவுகளில் மாற்றம் ஏற்படும் பட்சத்தில் மாத்திரம் கட்டணம் மீளளிக்கப்படும்.

11. அல்-ஆலிம் முதவஸ்ஸிதா சான்றிதழ்ப் பரீட்சை (2013 ஆம் ஆண்டும் அதன் பின்னரும்)

**பரீட்சை பற்றிய விபரம்.**- இப்பரீட்சை பின்வரும் ஆறு பாடங்களுக்குரிய மூன்று மணித்தியாலம் கொண்ட ஆறு வினாப் பத்திரங்களைக் கொண்டதாகும். ஆறு பாடங்களும் பின்வருமாறு :

(1) அல்லுகதுல் அறபிய்யா வல் அதப்-I - அறபு மொழியும் இலக்கியமும்-I
(2) அல்குர்ஆனுல் கரீம் - அல்குர்ஆனுல் கரீம்
(3) அல் ஹதீஸ் நபவி - நபி மொழிகள்
(4) அல் பிக்ஹுல் இஸ்லாமி - இஸ்லாமிய சட்டநெறி
(5) அத்தர்பியா அல் இஸ்லாமிய்யா - இஸ்லாமிய ஒழுக்கவியல்
(6) அத்தாரீகுல் இஸ்லாமி - இஸ்லாமிய வரலாறு

12. **பாடத்திட்டம் :**

(1) அல்லுகதுல் அறபிய்யா வல் அதப் - I (அறபுமொழியும் இலக்கியமும்-I).- இதில் கருத்து வெளியிடும் ஆற்றல், எண்ணங்களையும் கருத்துக்களையும் ஒழுங்குபடுத்தும் முறை என்பன பரீட்சிக்கப்படும். கட்டுரை எழுதுதல் இலக்கணமும் மொழி ஆராய்ச்சியும். முன் குறிப்பிடப்படாத பகுதிகளை மொழி பெயர்த்தல் என்பனவும் பரீட்சிக்கப்படும்.

இதற்கான பாட நூல்கள் :

(அ) அல் அரபிய்யது லின்னாஷிஈன் பாகம் 1, 2, 3 - மஹ்மூத் இஸ்மாஈல் ஸீனீ, நாஸிப் முஸ்தபா அப்துல் அஸீஸ் முக்தார், தாஹிர் ஹுஸைன்
(ஆ) மஜ்மூஅதுந்தஹ்வ் - மீஸான் அஜ்னாஸ், தக்வீமுல் லிஸான், அல்அவாமில் ஆகிய பிரிவுகள்
(இ) முதம்மிமதுல் ஆஜுரூமிய்யா - முஹம்மத் இப்னு முஹம்மத் அர்ரஈனி
(ஈ) அன்னஹ்வுல் வாழிஹ் அல்மர்ஹலா அல் இப்திதா இய்யா ஜூஸ்உ 1, 2, 3 - அலி ஜாஸிம், முஸ்தபா அமீன்

(2) அல்குர் ஆனுல் கரீம்.- ஜுஸ்உ அம்ம மனனம் : தஜ்வீத், மொழிபெயர்ப்பு உட்பட அல்குர்ஆன் பற்றி பொதுவான விளக்கம் பெறுதலும் கருத்துச் சுருக்கமும் தஜ்வீத் சட்ட விளக்கங்களும்

இதற்கான பாட நூல்கள் :

(அ) ஹிதாயதுல் முஸ்தபீத் - அஷ்ஷெய்கு மஹ்மூதுல் மஹ்மூத்
(ஆ) தப்ஸீர் அல்ஜலாலைன் - இமாம் ஜலாலுத்தீன் அஸ்ஸுயூத்தி

(3) அல் ஹதீஸுன் நபவி - நபி மொழிகள் :

* ஹதீஸ் ஒரு சட்ட மூலாதாரம் என்ற வகையில் ஹதீஸ் பற்றிய பொது விளக்கம்
* ஹதீஸ்களின் பொருள் விளக்கம்
* குறிப்பிடப்பட்ட ஹதீஸ்களை மனனமிடல்
* ஹதீஸ்களிலிருந்து சட்ட விளக்கம் பெறல் என்பன இவ்வினாப்பத்திரத்தில் பரீட்சிக்கப்படும்

இதற்கான பாட நூல்கள் :

(அ) அல் அர்பஊனன்நவவிய்யா - இமாம் நவவி (ரஹ்) அவர்கள்
(ஆ) ஸாதுத் தாலிபீன் - மௌலானா முஹம்மத் ஆஷிக் இலாஹி

(4) அல்பிக்ஹுல் இஸ்லாமி (இஸ்லாமிய சட்டநெறி) :

* இஸ்லாமிய சட்டக்கலை பற்றிய அறிவும் தெளிவும்
* காலத்துக்குக்காலம் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கான சட்டத் தீர்வுகளைப் பெறும் ஆற்றல் என்பன பரீட்சிக்கப்படும்.

இதற்கான பாட நூல்கள் :

மத்னு அபீஷுஜாஃ - அல்காழி அபீஷுஜா அஹ்மத் இப்னு ஹுஸைன் அஹ்மத் அல் இஸ்பஹானி

(5) அத்தர்பிய்யா அல் இஸ்லாமிய்யா (இஸ்லாமிய ஒழுக்கவியல்).- இஸ்லாமிய அறநெறிகளும் ஒழுக்க மாண்புகளும் நடைமுறைகளும் இவ்வினாப்பத்திரம் மூலம் பரீட்சிக்கப்படும்.

இதற்கான பாட நூல்கள் :

(அ) தஃலீமுல் முதஅல்லிம் - புர்ஹானுல் இஸ்லாம் அஸ்ஸர்னூஜி
(ஆ) ஹிஸ்னுல் முஸ்லிம் - ஸஈத் இப்னு அலி இப்னுவஹ்ப் அல்கஹ்தானி

(6) அத்தாரீகுல் இஸ்லாமி (இஸ்லாமிய வரலாறு).- ஜாஹிலியாக் காலம் பற்றிய விரிவான விளக்கம் ; முஹம்மத் (ஸல்) அவர்களது பிறப்பு முதல் வபாத் வரையான வரலாறு குலபாஉர்ராஷிதீன் குணநலன்கள், சாதனைகள், ஆட்சிமுறை, ஆட்சிப் பரம்பல்

இதற்கான பாட நூல் :

தாரீகுல் இஸ்லாமி - ஹஸன் இப்ராஹீம் ஹஸன்

13. **வினாப்பத்திர அமைப்பு**.- ஒவ்வொரு வினாப்பத்திரமும் I, II ஆகிய இரண்டு பகுதிகளை உள்ளடக்கியதாகும். பகுதி I இல் இடம்பெறும் வினாக்கள் கட்டாயமானவை. சுருக்கமாக விடையளிக்க வேண்டிய 10 வினாக்கள் இதில் இடம்பெறும். ஒவ்வொரு வினாவுக்கும் 4 புள்ளிகள் வீதம் 40 புள்ளிகள் வழங்கப்படும்.

பகுதி II.- ஒரு கட்டுரை வடிவிலான வினாவினையும் ஆறு பகுதிக் கட்டமைப்பு வினாக்களையும் உள்ளடக்கியதாகும். கட்டுரை அமைப்பிலான வினாவுக்கு விடையளிப்பது கட்டாயமானதாகும். இதற்கு இருபது புள்ளிகள் வழங்கப்படும். பகுதிக் கட்டமைப்பு வினாக்கள் ஆறில் நான்கிற்கு மாத்திரம் விடையெழுத வேண்டும். ஒவ்வொரு வினாவும் அ, ஆ ஆகிய இரு பகுதிகளைக் கொண்டது. ஒவ்வொரு பகுதிக்கும் 5 புள்ளிகள் வீதம் ஒரு வினாவுக்கு 10 புள்ளிகள் வழங்கப்படும்.

14. **சித்தியினைத் தீர்மானிக்கும் நியதிகள்**.- ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான மொத்தப் புள்ளிகள் 100 ; சித்தியடைவதற்குரிய குறைந்த புள்ளிகள் 35 ஆகும்.

| | | |
|---|---|---|
| (அ) | 00-34 வரை | W |
| (ஆ) | 35-49 வரை | S |
| (இ) | 50-64 வரை | C |
| (ஈ) | 65-74 வரை | B |
| (உ) | 75-100 வரை | A |

அல் ஆலிம் முதவஸ்ஸிதா சான்றிதழ் பரீட்சையில் எல்லாப் பாடங்களிலும் சித்தியடைந்து க. பொ. த. (சா. த.) பரீட்சையில் மொழி, கணிதம் உட்பட குறைந்தபட்சம் ஆறு பாடங்களிலாவது தேறியோருக்கே பரீட்சைத் திணைக்களத்தினால் அல் ஆலிம் முதவஸ்ஸிதா சான்றிதழ் வழங்கப்படும். ஆயினும் அனைத்துப் பரீட்சார்த்திகளுக்கும் தனித்தனி பெறுபேற்றுப் பத்திரங்களை பரீட்சைத் திணைக்களம் வழங்கும்.

15. **பரீட்சை முடிவுகளை வெளியிடலும் சித்திபெற்றவர்களைத் தீர்மானித்தலும்**.- அல் ஆலிம் முதவஸ்ஸிதா பரீட்சையில் இப்பரீட்சைக்குரிய ஆறு பாடங்களிலும் சித்தியடைந்தவர்கள் இப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களாகக் கருதப்படுவர். ஏதாவது ஒரு பாடத்தில் மாத்திரம் சித்திபெறத் தவறியிருப்பின் அவர் நூன சித்தி பெற்றவராகக் கருதப்படுவார். அவர் அடுத்துவரும் இரு பரீட்சைத் தவணைகளுக்குள் குறித்த பாடப்பரீட்சைக்குத் தோற்றி, அப்பாடத்தில் சித்திபெறின் அவரும் அல் ஆலிம் முதவஸ்ஸிதா பரீட்சையில் சித்திபெற்றவராகக் கருதப்படுவார்.

ஒரு பரீட்சார்த்தி முதவஸ்ஸிதா பரீட்சை சான்றிதழ் பெறுவதற்கு இப்பரீட்சையில் தேறியிருப்பதுடன் பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்படும் க. பொ. த. (சா. த.) பரீட்சைக்குத் தோற்றி மொழி, கணிதம் உட்பட குறைந்தபட்சம் ஆறு பாடங்களிலேனும் தேறியிருத்தலும் வேண்டும். இவ்விரு பரீட்சைகளிலும் தேறியவர்களுக்கே பரீட்சைத் திணைக்களத்தினால் அல் ஆலிம் முதவஸ்ஸிதா சான்றிதழ் வழங்கப்படும். உரியபடி பரீட்சைத் திணைக்களத்தில் விண்ணப்பம்செய்து அச்சான்றிதழைப் பெறுக்கொள்ளலாம்.

16. **அல்-ஆலிம் ஸானவிய்யா சான்றிதழ் பரீட்சை (2015 ஆம் ஆண்டும் அதன் பின்னரும்) :**

பரீட்சை பற்றிய விபரம்.- இப்பரீட்சை பின்வரும் ஆறு பாடங்களுக்குரிய மூன்று மணித்தியாலம் கொண்ட ஆறு வினாப் பத்திரங்களைக் கொண்டதாகும். ஆறு பாடங்களும் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| (1) | அல்லுகதுல் அரபிய்யா வல்அதப்-II | - அரபு மொழியும் இலக்கியமும்-II |
| (2) | அல் குர்ஆன் வஉலூமுஹு | - அல்குர்ஆனும் குர்ஆனிய கலைகளும் |

| | | |
|---|---|---|
| (3) | அல் ஹதீஸ் வஉலூ முஹு | - அல் ஹதீஸும் ஹதீஸ் கலைகளும் |
| (4) | அல் பிக்ஹுல் இஸ்லாமி வஉஸூலுஹு | - இஸ்லாமி சட்டநெறியும் அடிப்படைகளும் |
| (5) | அல் ஹழாரதுல் இஸ்லாமிய்யா | - இல்லாமிய நாகரிகம் |
| (6) | அல் அகீததுல் இஸ்லாமிய்யா | - இஸ்லாமிய கோட்பாடுகள் |

17. **பாடத்திட்டம்** :

(1) அல்லுகதுல் அரபிய்யா வல்அதப்-II (அறபு மொழியும் இலக்கியமும்-II).- எண்ணங்களையும் கருத்துக்களையும் தொகுத்து வெளியிடும் ஆற்றல் பரீட்சிக்கப்படும். அறபியிலிருந்து தமிழ்/ சிங்களம்/ ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஏதாவதொன்றில் மொழிபெயர்க்கும் ஆற்றல் பரீட்சிக்கப்படும். ஐய்னுல் ஹுதா பீஷர்ஹிகத்ரிந்நதா என்ற நூலின் தரத்திலான அறபு இலக்கண அறிவும் பரீட்சிக்கப் படும். பாடநூலில் இல்லாத பகுதிகளை மொழிபெயர்த்தலும் சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம் ஆகிய பிற மொழியிலிருந்து அறபுக்கு மொழி மாற்றம் செய்தலும், பாடநூலில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கியப் பண்புகள் பற்றியதான விடயங்களும் பரீட்சிக்கப்படும்.

இதற்கான பாட நூல்கள் :

(அ) அல் அறபிய்யது லின்னாஷிஈன் பாகம் 4, 5, 6 - மஹ்மூத் இஸ்மாஈல் ஸீனி, நாஸிர் முஸ்தபா அப்துல் அஸீஸ், முக்தார் தாஹிர் ஹுஸைன்
(ஆ) அல் கிராஅதுர் ராஷிதா பாகம் 3 (1-15 பாடங்கள்) - அபுல் ஹஸன் அலி (நத்வி)
(இ) அந்நஹ்வுல் வாழிஹ் (அல்-மர்ஹலா ஸானவிய்யா) 1, 2, 3 - அலி அல் ஜாஸிம், முஸ்தபா அமீன்
(ஈ) ஐனுல் ஹுதா பீ ஷரஹிகத்ரின்நதா, அஷ்ஷெய்க் உஸ்மான் அல்பன்னானி
(உ) அல் பலாகதுல்வாழிஹா (கிஸ்முல் பயான் வல்பதீஉ) - அலிஜாஸிம், முஸ்தபா அமீன்

(2) அல்குர்ஆன் வஉலூமுஹு (அல்குர்ஆனும் குர்ஆனியா கலைகளும்).- குறிப்பிடப்பட்ட ஸூறாக்களின் உள்ளடக்கம் பற்றிய விரிவான அறிவும் குர்ஆனியக் கலைகள் தொடர்பான விளக்கமும் பரீட்சிக்கப்படும்.

பாட நூல் :

(அ) ஸப்வதுத்தபாஸிர்-முஹம்மத் அலி அஸ்ஸாபூனி - அல்முல்க், அல்வாகிஆ, அந்நூர், அல்ஹுஜுராத், அல்கஹ்பு, யாஸீன் ஆகிய ஸூராக்கள்
(ஆ) அத்திப்யான் பீஉலூமில் குர்ஆன் - முஹம்மத் அலி அஸ்ஸாபூனி

(3) அல் ஹதீஸ் வஉலூமுஹு (அல் ஹதீஸும் ஹதீஸ் கலைகளும்).- குறிப்பிடப்பட்ட பாட நூல்களில் இடம்பெறும் ஹதீஸ்களின் உள்ளடக்கம், வாழ்வில் அவற்றை செயற் படுத்தும் முறை, அதன் பயன்கள் என்பன பரீட்சிக்கப்படும். மேலும் ஹதீஸ் கலை தொடர்பான கலைச்சொற்கள், அவற்றின் விளக்கம், ஹதீஸின் பாதுகாப்புக்காக முன்னோர் மேற்கொண்ட ஆய்வுகள்-பங்களிப்புகள் பற்றிய அறிவும் பரீட்சிக்கப்படும்.

இதற்கான பாட நூல்கள் :

(அ) புலூகுல் மராம் - இப்னு ஹஜர் அல் அஸ்கலானி (அத்தியாயம் தஹாரா முதல் நிகாஹ் முடியும் வரையான பகுதி)
(ஆ) மிஷ்காதுல் மஸாபீஹ் - அல் இமாம் வலியுத்தீன் அபூ அப்துல்லாஹ் முஹம்மத் இப்னு அப்துல்லாஹ் அல் கதீப் (ரஹ்) - (பின்வரும் பகுதிகள் : அல் ஈமான், அல் இஃதிஸாம் பில்கிதாபி வஸ்ஸுன்னா, அல்இல்மு, பழாஇலுல் குர்ஆன், அல் அதப், அல்பிதன், அல்மனாகிப்)
(இ) தைஸீர் முஸ்தலஹில் ஹதீஸ் - மஹ்மூத் அத்தஹ் ஹான்

(4) அல்பிக்ஹுல் இஸ்லாமி வஉஸூலுஹு (இஸ்லாமிய சட்ட நெறியும் அடிப்படைகளும்).- குறிப்பிடப்பட்டுள்ள பாடநூலின் அடிப்படையில் பிக்ஹு, உஸூலுல் பிக்ஹ் சம்பந்தமான அறிவும் அதனை வாழ்வில் கையாளும் விதம் பற்றிய விளக்கமும் பரீட்சிக்கப்படும்.

இதற்கான பாட நூல்கள் :

(அ) உம்ததுஸ்ஸாலிக் வஉம்ததுன்நாஸிக் - இமாம் ஷஹாபுத்தீன் அஹ்மத் இப்னு அந்நகீப் அஷ்ஷாபிஈ
(ஆ) ஷரஹுல் வரகாத் பீ இல்மி உஸூலில் பிக்ஹி - ஜலாலுத்தீன் முஹம்மத் இப்னு அஹ்மத் அல்மஹல்லி அஷ்ஷாபிஈ
(இ) தஸ்ஹீலுல் வுஸூல் இலாபஹ்மி இல்மில்உஸூல்

(5) அல்ஹழாரதுல் இஸ்லாமிய்யா (இஸ்லாமிய நாகரிகம்).- குறிப்பிடப்பட்ட பாடநூல்களின் அடிப்படையில் உமைய்யாக் காலம் முதல் உஸ்மானிய கிலாபத்தின் வீழ்ச்சி வரையான இஸ்லாமிய வரலாறு பற்றியும் இஸ்லாமிய நாகரீக வளர்ச்சி பற்றியும் பரீட்சிக்கப்படும்.

பாட நூல் :

அத்தாரீகுல் இஸ்லாமி - இப்ராஹிம் பின் மஹ்மூத் அப்துர்ராழீ

(6) அல் அகீததுல் இஸ்லாமிய்யா (இஸ்லாமியக் கோட்பாடு கள்).- குறிப்பிட்ட பாட நூல்களின் அடிப்படையில் இஸ்லாமிய அகீதா பற்றிய அறிவு, விளக்கம், வாழ்க்கையில் அதன் பிரயோகம் என்பன பரீட்சிக்கப்படும்.

பாட நூல் :

ஜவ்ஹரதுத்தவ்ஹீத் - அல் இமாம் இப்ராஹீம் அல்லிகாஇ அல்லது அகீததுத் தஹாவிய்யா - அல் இமாம் அபூஜஉபர் அஹ்மத் இப்னு ஸலாமா அத்தஹாவி

18. **வினாப்பத்திர அமைப்பு**.- ஒவ்வொரு வினாப்பத்திரமும் பகுதி I, பகுதி II என இரண்டு பகுதிகளைக் கொண்டதாக அமையும்.

பகுதி I இல் உள்ள சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். சுருக்கமாக விடையளிக்கவேண்டிய பத்து வினாக்களை உள்ளடக்கிய இப்பகுதியில் ஒவ்வொரு வினாவுக்கும் நான்கு புள்ளிகள் வீதம் 10 வினாக்களுக்கும் மொத்தம் 40 புள்ளிகள் வழங்கப்படும்.

பகுதி II இல் ஒரு கட்டுரை வடிவிலான வினாவையும் மற்றும் ஆறு பகுதிக் கட்டமைப்பு வினாக்களையும் உள்ளடக்கியதாகும். கட்டுரை அமைப்பிலான வினாவுக்கு விடையளிப்பது கட்டாயமானதாகும். இதற்கு இருபது புள்ளிகள் வழங்கப்படும். பகுதிக் கட்டமைப்பு வினாக்கள் ஆறில் நான்கிற்கு மாத்திரம் விடையெழுத வேண்டும். ஒவ்வொரு வினாவும் அ, ஆ ஆகிய இரு பகுதிகளைக் கொண்டது. ஒவ்வொரு பகுதிக்கும் 5 புள்ளிகள் வீதம் ஒரு வினாவுக்கு 10 புள்ளிகள் வழங்கப்படும்.

19. **சித்திபெறுவதைத் தீர்மானிக்கும் நியதிகள்**.- ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்குமான மொத்தப் புள்ளிகள் 100 ; சித்தியடைவதற்குரிய குறைந்த புள்ளி 40. இப்பரீட்சையின் ஆறு பாடங்களிலும் சித்திபெற்ற ஒருவர் பரீட்சையில் சித்திபெற்றவராவார். ஐந்து பாடங்களில் சித்தியடைந்து ஒரு பாடத்தில் மட்டும் சித்தியடையத் தவறுபவர் நூன சித்தி பெற்றவராகக் கருதப்படுவர். அடுத்துவரும் இரு பரீட்சை தவணைகளுக்குள் நூன சித்தி பாடத்துக்குத் தோற்றிச் சித்திபெறுவதன் மூலம் இப்பரீட்சையில் தேறியவராகலாம். தரம் வழங்குதல் கீழ்வருமாறு அமையும் :

| | | |
|---|---|---|
| (அ) | 00-39 வரை | W |
| (ஆ) | 40-54 வரை | S |
| (இ) | 55-64 வரை | C |
| (ஈ) | 65-74 வரை | B |
| (உ) | 75-100 வரை | A |

**சான்றிதழ்**.- அல் ஆலிம் ஸானவிய்யா சான்றிதழ் பரீட்சையில் சித்தியடைவதுடன் பொது ஆங்கிலம், பொதுச் சாதாரண பரீட்சை தவிர்ந்த எவையேனும் மூன்று பாடங்களில் சித்தியுடன் க. பொ. த. (உயர்தர) பரீட்சையிலும் சித்தியடைந்தவர்களுக்கே அல் ஆலிம் ஸானவிய்யா சான்றிதழ் வழங்கப்படும். உரியபடி விண்ணப்பஞ் செய்து இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திலிருந்து சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும். ஆயினும் அல் ஆலிம் ஸானவிய்யா பரீட்சையில் தோற்றியோருக்குத் தனித்தனியாகப் பரீட்சை பெறுபேற்றுப் பத்திரம் பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்படும்.

க. பொ. த. (உ. த.) பரீட்சை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்படும். அதன் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக அதற்கு தோற்றுதல் வேண்டும்.

பரீட்சை முடிவுகளை வெளியிடலும், சித்திபெற்றவர்களை தீர்மானித்தலும்.- அல் ஆலிம் ஸானவிய்யா பரீட்சையில் ஆறு பாடங்களிலும் சித்தியடைந்தவர்கள் இப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களாகக் கருதப்படுவர். ஏதாவது ஒரு பாடத்தில் மாத்திரம் சித்திபெறத் தவறியவர், அவர் நூன சித்தி பெற்றவராகக் கருதப்படுவார். அவர் அடுத்துவரும் இரு பரீட்சைத் தவணைகளுக்குள் குறித்த பாடப் பரீட்சைக்குத் தோற்றி அப்பாடத்தில் சித்திபெறின் அவரும் அல் ஆலிம் ஸானவிய்யா பரீட்சையில் சித்திபெற்றவராகக் கருதப்படுவர்.

20. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப் பட்டுள்ள இப்பரீட்சைத் திட்டத்தில் மொழிகளுக்கிடையே வேறுபாடுகள் காணப்படின் தமிழ் மொழியில் குறிப்பிடப்பட்டுள்ளவையே சரியானவையெனக் கருதுதல் வேண்டும்.

21. இப்பரீட்சைகள் தொடர்பில் இங்கு குறிப்பிடப்படாத யாதேனும் விடயம் பற்றி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் முடிவே இறுதியானது.

அநுர எதிரிசிங்க,
பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2011.12.21.

1-444